# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 10 வள்ளுவர் ஆண்டு 2026 ஆவணி 28 புதன்கிழமை (13-09-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 293


# புன்னாலைக்கட்டுவனை நோக்கி முன்னேறிய படையுடன் கடும் சமர்!

## நகர முயலும் துருப்புகளை தடுத்து புலிகள் தொடர்ந்து தாக்குதல்

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 13

நேற்று அதிகாலை பலாலி இராணுவ முகாமின் முன்னணி நிலைகளில் இருந்து மல்லாகம், புன்னாலைக்கட்டுவன் பகுதிகளை நோக்கி பெரும் எடுப்பில் முன்னேறிவந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் கடும்சமர் புரிந்தனர்.

நேற்று பகல் முழுவதும் அப்பகுதியில் கடும் சண்டை நிகழ்ந்தது.

டாங்கிகள், பீரங்கிகள் சகிதம் இந்த இராணுவ நடவடிக்கையை நேற்று ஸ்ரீலங்காத் துருப்புகள் ஆரம்பித்தன.

சுமார் மூவாயிரம் துருப்புகள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

பெருத்த எடுப்பில் — குடிமனைப் பகுதிகளை நோக்கி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## பலியானோரின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 13

பலாலி இராணுவ முகாம் பகுதியிலிருந்து படையினர் நேற்று மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் விவரம் வருமாறு:-

வாரியபுலம் பகுதியில் அந்தியேட்டிக் கிரியை இடம்பெற்ற வீடொன்றில் விழுந்த ஷெல்லில் அக்காவும் தம்பியுமாக இருவர் உயிரிழந்தனர். அவர்களின் விவரம் —

★ தேவராசா றெக்சாயினி (வயது 20) — தலையில் படுகாயமடைந்த இவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

★ தேவராசா றெஜீபன் (வயது 14) — இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு சில மணி நேரத்தில் உயிரிழந்தார். இவர்களது மற்றொரு சகோதரியும், தந்தையும், உறவினர்கள் சிலரும் இச்சம்பவத்தில் படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

சூராவத்தைப் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் அச்சமயம் வீதியால் வந்துகொண்டிருந்த வயோதிபரும் அவரின் பேர்த்தியும் உயிரிழந்தனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ வோல்டர் வைத்திலிங்கம் (வயது 73)

★ பத்மநாதன் தேவகௌரி

[5 ஆம் பக்கம் பார்க்க]

# அகோர ஷெல்வீச்சில் 10 பொதுமக்கள் பலி

# 48 பேர் காயம்; வீடுகள், கட்டடங்கள் நாசம்

## காயமுற்ற பலர் உயிருக்குப் போராடும் நிலையில்

யாழ்ப்பாணம், செப். 13

பலாலி இராணுவ முகாமிலிருந்து மக்கள் குடியிருப்புக்களை நோக்கி நேற்று நடத்தப்பட்ட கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் பத்துப் பேர் உயிரிழந்தனர்; 48 பேர் காயமடைந்தனர்; பல வீடுகள், கடைகள், ஆலயங்கள் நாசமாகின.

படையினரின் ஷெல்களினால் படுகாயமுற்று அங்கவீனர்களாகிய பலர் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

நேற்றுக் காலை முதல் பல நூற்றுக் கணக்கான ஷெல்கள் மல்லாகம், சுன்னாகம், கோட்டைக்காடு, சூராவத்தை, மயிலணி, மயிலங்காடு, வசாவிளான், ஏழாலை மேற்கு, ஏழாலை வடக்கு, ஏழாலை மத்தி, ஏழாலை தெற்கு, குப்பிளான், ஈவினை, ஊரெழு, அச்செழு, நவக்கிரி, புத்தூர் மேற்கு, அச்சுவேலி, ஆவரங்கால், சிறுப்பிட்டி, நீர்வேலி, நிலாவரை, தோப்பாய் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

ஷெல் தாக்குதல்களுக்கு அஞ்சி தம் இருப்பிடங்களை விட்டு வெளியேறி ஓடிக் கொண்டிருந்தவர்களும் வேறு இடங்களில் தஞ்சமடைந்திருந்தவர்களுமே பெரும்பாலும் ஷெல் தாக்குதல்களுக்கு இலக்கானார்கள்.

நேற்றைய தாக்குதல்களினால் சுமார் நாலாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்தனர் என பூர்வாங்க மதிப்பீடுகள் தெரிவித்தன. (உ-க-3 4 6-11-13-15-152)

## காயமுற்றோரின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 13

நேற்று படையினரின் ஷெல் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் 48 பேர் காயமுற்றனர். யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள அவர்களின் விவரம் வருமாறு:-

சுன்னாகம் வாரியப் புலத்தில் அந்தியேட்டிக் கிரியை இடம்பெற்றுக் கொண்டிருந்த வீட்டின் முன் விழுந்த ஷெல்லினால் இருவர் உயிரிழந்தனர்; ஐவர் காயமுற்றனர். அவர்களின் விவரம் —

★ தேவராசா றெஜி (வயது 16)

★ றெஜியின் தந்தையார் கணபதி தேவராசா [வயது 47] — இவரின் மற்றைய இரு பிள்ளைகளும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்.

★ நெல்லியடியைச் சேர்ந்த ஜோர்ஜ் விக்சன் பீற்றர்பெனி [வயது 28]

★ பெனியின் மனைவியான பீற்றர் பெனி கல்பனா (வயது 20)

★ பெனியின் பிள்ளையான

[5 ஆம் பக்கம் பார்க்க]

## ஐரிஷ்மோனா பயணிகளில் 93 பேர் தீவுப்பகுதிக்கு!

### 'ஹபரண'வில் அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 13

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் "ஐரிஸ் மோனா" கப்பல் பயணிகள் 93 பேரையும் 'ஹபரண' கப்பல் மூலம் தீவுப்பகுதிக்கு அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுவதாக தெரியவந்தது.

திருகோணமலையிலிருந்து எதிர் வரும் 18 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வரும் "ஹபரண" கப்பலை இருநாள்கள் இங்கு தரித்து நிற்க ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் —

அச்சமயத்தில் இந்த பயணிகளை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரியவந்தது.

இக்கப்பல் நேரடியாக தீவுப் பகுதிக்கு செல்ல முடியாத பட்சத்தில் பயணிகளை காங்கேசன் துறையில் கடற்படையிடம் ஒப்படைத்து, அவர்கள் மூலம் தீவுப்பகுதிக்கு அனுப்பி வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்தது. (ஒ-3)

## இரு போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், செப். 13

நேற்றுக் காலை புன்னாலைக்கட்டுவனை நோக்கிமுன்னேற முயன்ற படையினருடன் இடம் பெற்ற கடும் சண்டையில் இருபோராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

கப்டன் ஜோதி அல்லது வாணி (டொறின் றொசித்தா பங்கிராஸ் — குருநகர்) வீரவேங்கை செங்குட்டுவன் அல்லது அகிலன் (நல்லதம்பி அருளானந்தன்— மட்டக்களப்பு) ஆகியோரே வீரச்சாவு

[5 ஆம் பக்கம் பார்க்க]

## கொழும்பில் 50 தமிழர் கைது

கொழும்பு, செப். 13

கொழும்பு நகரப் பகுதி மற்றும் சுற்றுப்புறங்களில் நடந்த வீடு வீடாகத் தேடுதல்களின் போது 50 தமிழர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-3)

## புல்மோட்டையில் அதிரடி; 4 இராணுவத்தினர் பலி

யாழ்ப்பாணம், செப். 13

திருகோணமலை புல்மோட்டைப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவ காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நேற்று அதிகாலை நடத்திய அதிரடித் தாக்குதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர்.

புல்மோட்டை கோர்ப்பரேசன் முகாமுக்கும், அரிசிமலை முகாமுக்கும் இடையில் இருந்த காவலரணே தாக்குதலுக்கு இலக்கானது.

இரு நிமிடமே நீடித்த இத்தாக்குதலின் போது ஏ.கே. ரக துப்பாக்கிகள் —5, ஆர்பிஜி ரவைக் கூடுகள் —27, ஏ.கே.எல்.எம்.ஜி ரவைக் கூடு —6, நடுத்தர ரவைகள் இணைப்புகளுடன் —370, நடுத்தர ரவைகள் —570, கைக்குண்டுகள் — 7 ஆகிய ஆயுத தளபாடங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. [ஒ-3]

## கல்யாணி, நரோமாவின் சேவைகள் இனி இல்லை!

### சிங்கப்பூருக்குச் செல்கின்றன

யாழ்ப்பாணம், செப். 13

நிவாரண உணவுப்பொருள்களை யாழ்க்கே ஏற்றி வரும் "லங்கா கல்யாணி" கப்பலின் சேவை நிறுத்தப்பட உள்ளது.

சுற்றிவிட்டி — மன்னார் சேவையில் ஈடுபடும் "நரோமா" கப்பலின் சேவையும் நிறுத்தப்படுகிறது.

இந்த இரு கப்பல்களும் சிங்கப்பூரில் உள்ள கப்பல் நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமானவை. "ஐரிஷ் மோனா" கப்பலும் பிரஸ்தாப நிறுவனத்தினுடையதே.

[5 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம்-2 அறிவித்தல்

இந்துமத குருமார் ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## விசேட பொதுக் கூட்டம்

மேற்படி ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட்டம் 20-9-95 புதன்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு தலைவர் சிவஸ்ரீ க. குகதாசக்குருக்கள் தலைமையில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகம் அளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இடம்: யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி.

விடயம்; 210 அங்கத்தவர்களின் கையொப்பக் கடிதம் சம்பந்தமானது.

சிவஸ்ரீ க. குகதாசக்குருக்கள்
தலைவர்

பிரம்ஸ்ரீ. வை. வெங்கடாசலஐயர்
செயலாளர்

(38517) இந்து மதகுருமார் ஒன்றியம்

## மில் விற்பனைக்கு

12" இறேன்டர் — 2
நம். 7 அலன் — 1
சைனீஸ் சோ — கிறி 1
RUSTON 19 H. P. புடன்

மற்றும்

2. 4 ROBIN யைவேரவும்
விற்பனைக்கு உண்டு.

தொடர்பு முகவரி:-
ஜே. தணிகாசலம், ஆசிரியர்
இணுவில் ஸ்ரீ, பரராசசேகரப் பிள்ளையார்
கோவிலடி,
இணுவில் தெற்கு

[இ 2246]

## கண்ணீர் அஞ்சலி

அச்செழுவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் அர்ப்பணிப்புடன் ஆசிரியத் தொண்டாற்றி, பலவழிகளிலும் பாடசாலையின் வளர்ச்சிக்கு சேவையாற்றியவருமாகிய ஆசிரியை

### செல்வி சாந்தி மகேந்திரன்

நேற்று (12 - 09 - 1995) அகாலமரணமான செய்தி கேட்டு ஆறாத்துயரடைகின்றோம். இவருக்கு எமது இதயபூர்வமான அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை,
நீர்வேலி.

[38518]

## ஈடுசெய்ய முடியா இழப்பு



அமரர்

### ஆத்மஜோதி நா. முத்தையா

சுயநலமற்றவர் தனக்கென வாழா பெருமான், பொதுநல தொண்டன் அவரது இழப்பு "தமிழ் சைவ இந்து" ஈடுசெய்ய முடியாதது. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய;

இலங்கை சைவமன்றம், பருத்தித்துறை,
பிரார்த்திக்கின்றது.

விளம்பர அன்பளிப்பு:
குகன் ஸ்ருடியோ.
பருத்தித்துறை. [சி/2238]

## "வெளிச்சம்" வெளிவந்தது

யாழ்ப்பாணம், செப் 13

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான 'வெளிச்சம்' கலை, இலக்கிய சமூக இதழ் வெளிவந்துள்ளது.

நான்காவது ஆண்டு நிறைவு இதழாக வெளிவந்துள்ள இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரனை பற்றிய கருத்துக்களுடன், பிரம்மஞானி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ், முருகையன், காசி ஆனந்தன், குழந்தை ம. சண்முகலிங்கம் உட்பட ஐம்பது வரையான படைப்பாளிகளின் படைப்புகள் இடம் பெற்றுள்ளன. (ஏ)

## புலிகளின் குரல் வானொலியில்

புதன் இரவு
13 – 09 – 1995

★ 8- 02 – ஒலிவோவச– நிகழ்ச்சியில் தமிழ்க்கவி எழுதிய' பெற்றோரைப் பெற்றதால் பெருமை கொள்ளும் தமிழீழம்' கிராமிய நிகழ்வு.
★ 8- 20— நீங்கள் கேட்டவை
★ 8–30 — செய்திகள்
★ 8- 40— நாடகம்— தபரம் எழுதிய—'' யாரைத்தான் நம்புவதோ''

வியாழன் காலை
14– 09 – 1995

★ 7–02— மாவீரவணக்கம்
★ 7- 15— விடுதலைக் கீதங்கள்.
★ 7–30 — செய்திகள்
★ 7–35 — பத்திரிகைச் செய்திகள் அதனைத் தொடர்ந்து
★ 8–00 மணிவரை— விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

புதன் மாலை

★ 5–01—சிந்தனைச்சிதறல்
★ 5–02 — எழுச்சிகீதம்
★ 5–10 — புதியவை
★ 5–15— பட்டப்பாடல்
★ 5–30— அறிவூற்று.
★ 6–00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6–02— உங்கள் தெரிவு.
★ 6-10 —செய்திகள்
★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
★ 6–20— உங்கள் தெரிவு.

## கண்ணீர் அஞ்சலி

08 – 09 – 1995 அன்று
கனடாவில் காலமான ஆத்மீக வள்ளல்

### ஆத்மஜோதி நா. முத்தையா

அவர்கட்கு எமது

## கண்ணீர் அஞ்சலி

ஆத்மீக வள்ளலாம்
ஆத்மஜோதி ஐயாவே
இலங்கையில் மட்டுமன்றி
மேற்குலக நாடுகளிலும்
மேன்மை சொல் சைவநீதி
விளங்கிடச் செய்திரே

கனடாவால் வருவீர்களென்று
நினைவோடு நாம் இருந்தோம்
கைவாக்கி எம் நினைவை
கணப்பொழுதில் மறைந்ததென்ன
கண்ணீரைப் பூவாக்கி
காணிக்கை செலுத்துகின்றோம்.

வாரிவனேஸ்வரம்
(சாவகச்சேரி)
இந்து மகளிர் மன்றம்

[இ-2248]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
26
—
10
—
1960



மறைவு:
14
—
08
—
1995

### நடேசு சுகிர்தராஜன்
(சுகிர்தம்)

அணையாத மெழுகுதிரியாய்
அன்பாய் உழைத்தாயே
சென்ற வழி எதுவோ
செப்பாமல் போனாயே
எம் இதய ஜோதியே
என்றும் உனை மறவோம்

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 13-09-95 புதன் அன்று காலை 11½மணிக்கு யாழ் பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

28, இராசேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்

[38520]

## பொருளியற் கல்லூரி

110/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்,
(மக்கள் வங்கிக்கு அருகில்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள்

### 1995 - மீட்டல் வகுப்பு

பொருளியல்
S. வரதராஜன்
(B. A. (Hons)

| G A. Q.: Ist in COM | B. A, B. COM PART I |
|---|---|
| பிரிவு I திங்கள், வியாழன் 6 - 30 – 7 - 30 a.m | பிரிவு I புதன், வெள்ளி 6 - 30 — 7 - 30 a. m. |
| பிரிவு II சனி, ஞாயிறு 2 - 00 — 3 - 00 p m. | பிரிவு II சனி, ஞாயிறு 3 - 00 — 4 - 00 p m. |
| **B. A. PART II** | **B, COM PART II** |
| சனி. ஞாயிறு 1 - 00 — 2 - 00 பகல் 4 - 00 — 6 - 00 | புதன் 4 - 00 — 6 - 00 p.m. |

ஆரம்பம்: 15 - 09 - 1995
வெள்ளி 6-30 a m.

[சி/2240]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீர்வு யோசனை குறித்து கூட்டணி பேச்சு நடத்தும்

### சிங்கள அரசியல் கட்சிகளுடன்

கொழும்பு, செப். 13

அரசு முன் வைத்துள்ள தீர்வு யோசனைகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதான சிங்கள அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

தீர்வு யோசனைகள் நகல் வடிவில், விசேட நாடாளுமன்றத் தெரிவுக் குழு முன் சமர்ப்பிக்கப்பட்ட பின், இப்பேச்சுக்களை நடத்தவுள்ளதாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவரும், முன்னாள் நாடாளுமன்ற அங்கத்தவருமான திரு. வி. ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

அரசின் தீர்வு யோசனைகள் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கனவே, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சுக்களை நடத்தி உள்ளது.

தீர்வு யோசனைகள் விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட பின் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீண்டும் ஒரு சுற்றுப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும்—

அதே போன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

### வணிகர் கழக கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். வணிகர் கழக நிர்வாகத்தினருக்கும், வணிக உரிமையாளர்களுக்கும் இடையேயான கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு, யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)

### நெல்லியடியிலும் தமிழீழ வைப்பகக் கிளை

யாழ்ப்பாணம், செப். 13

தமிழீழ வைப்பகத்தின் நெல்லியடிக் கிளையின் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை நடைபெறும்.

ஏற்கனவே தமிழீழ வைப்பகத்தின் கிளைகள் யாழ்ப்பாணம், கன்னாதிட்டியிலும், கிளிநொச்சியிலும் இயங்கி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## திலீபனின் 8 ஆம் ஆண்டு நினைவு; எழுச்சிபூர்வமாக நினைவு கூர ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப். 13

தியாகி லெப். கேணல் திலீபனின் 8 ஆம் ஆண்டு நிறைவு நினைவை நாளை மறுதினம் 15 ஆம் திகதியிலிருந்து 26 ஆம் திகதிவரையான 12 நாட்களிலும் எழுச்சிபூர்வமாகத் தமிழீழம் நினைவுகூரவுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வெற்றிப் பாதையிலே நின்று கொண்டு, உலகெனாம் தமிழீழ விடுதலை எழுச்சி சவாலை விட்டுத் துலங்குகின்ற இந்தக் காலகட்டத்திலே, அந்தத் தமிழீழத் தியாகச் செம்மலின் 8 ஆம் ஆண்டு நினைவை எழுச்சியோடும் விடுதலை உறுதியோடும் தமிழீழம் கொண்டாடவுள்ளது.

தியாகி திலீபன் 1987 செப்ரெம்பர் 26 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு எம் நெஞ்சங்களில் நெருப்பாக எம்மை விட்டுப் பிரிந்தார். தியாக மரணத்தை அணைத்துக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனை வெளியிட்டுள்ள இம் மாதம் 11 ஆம்திகதிய செய்திக் குறிப்பில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

செய்தி குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அந்தப் பன்னிரு நாட்களிலும் யாழ். மாவட்டத்தில் சகல வட்டப் பிரதேசங்களிலும் முக்கிய இடங்களில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டி, பந்தல் அமைத்துத் தியாகி லெப். கேணல் திலீபனின் திருவுருவப்படம் வைத்துச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்து திலீபன் வேண்டிய தமிழீழ விடுதலைக்கான தமிழீழ மக்களின் எழுச்சி கோஷம் செய்வோம்!

அந்தத் தியாகியின் நினைவாகச் சிரமதானங்கள் செய்வோம். அடையாள உண்ணாவிரதங்களில் கலந்துகொள்வோம்!

இறுதி நாளாகிய 26 ஆம் திகதி கோட்டையில் நடைபெறும் அடையாள உண்ணாவிரதத்திலும் நினைவுப் பொதுக் கூட்டத்திலும் எழுச்சிபூர்வமாகக் கலந்து கொள்வோம்!

—இவ்வாறு மாவீரர் பணிமனைச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (க)

### யாழ். மாவட்டத்தில்

## உருளைக்கிழங்கு செய்கை இம்முறை நடைபெறாது?

யாழ்ப்பாணம், செப். 13

இம்முறை யாழ். மாவட்டத்தில் உருளைக் கிழங்கு செய்கை பண்ணப்படுவது சந்தேகம் எனத் தெரியவந்தது.

வெளிநாட்டு விதை உருளைக்கிழங்கைப் பெற்றுக் கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதை அடுத்தே இந்த நிலை தோன்றியுள்ளது.

யாழ். மாவட்ட விவசாயிகள் உள்நாட்டு விதை உருளைக்கிழங்கை, விரும்பாது, வெளிநாட்டு விதை உருளைக் கிழங்கைப் பயிரிடவே விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதனை அடுத்து வெளிநாட்டு விதை உருளைக் கிழங்கை பெற்றுக் கொடுக்க யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

எனினும், நுவரெலியா விதை உருளைக்கிழங்கையே அனுப்பமுடியும் என வடக்கு-கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் அறிவித்து விட்டார்.

இவ் விடயம் தொடர்பாக யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர், வடக்கு-கிழக்கு மாகாணசபை விவசாயப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளார். (எ-4)

### பாடசாலை நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம், செப். 13

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் தற்காலிகமாக மாலை நேரப்பாடசாலையாக இயங்கி வந்த வீமன்காமம் மகாவித்தியாலயம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முதல் காலை நேரப் பாடசாலையாக அதே இடத்தில் இயங்குவதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ-4)

### உரத் தடையால் யாழ். மாவட்டத்தில்

# பெரும்போக நெற் செய்கையில்

# 40 சதவீதம் வீழ்ச்சி ஏற்படும்!

யாழ்ப்பாணம், செப். 13

வடபகுதி மீதான அரசின் உரத்தடையால், இம்முறை யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையில் 40 சதவீத இழப்பு ஏற்படும் என, யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது 26 ஆயிரம் ஏக்கரில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதற்கு 3 ஆயிரத்து 550 மெற்றிக் தொன் உரம் தேவை.

இவற்றுள் அடிக்கட்டுப் பசளை (வி - கலவை) 800 மெற்றிக்தொன், அமோனியம் சல்பேற் ஆயிரத்து எழுநூற்றி ஐம்பது, மெற்றிக் தொன், ரி. டி. எம். ஆயிரம் மெற்றிக் தொன் அடங்கும்.

இவை பயன்படுத்தப்படாவிடில் விளைச்சல் 40 சதவீதம் குறைவடையும்.

சென்ற 94/95 காலபோகத்தில் அதற்கு முன்னைய காலங்களை விட கூடிய விளைச்சலை யாழ். மாவட்டம் பெற்றிருந்தது.

இக்காலப்பகுதியில் 21ஆயிரம் மெற்றிக் தொன் விளைச்சல் பெறப்பட்டது.

திருந்திய புதிய நெல் வர்க்கங்களான பி. ஜி — 500 போன்றவை பயிரிடப்பட்டதும் — தேவையான பருவத்தில் மழைவீழ்ச்சி இருந்தும்—

உரவகைகளை ஓரளவு எடுத்து வரக் கூடியதாக இருந்தமே 94/95 காலபோகத்தில் கூடிய அறுவடை பெறப்பட்டதன் காரணம் ஆகும்.

உரத்தடை இருப்பதால் இந்த வருட கால போகத்தில் (95/96) பசளை தாண்டற் பேறு குறைந்த மழைய திருந்திய வர்க்கங்களான எச்-4, 62-355, மொட்டைக் கறுப்பன் போன்ற உள்ளூர் நெல் இனங்களை கூடுதலாக விதைப்பதன் மூலம் ஓரளவு விளைச்சலைப் பெற முடியும் என உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

உள்ளூரில் கிடைக்கும் சேதனப் பசளைகளான வேப்பம் பிண்ணாக்கு (நிமியா உரம்) போன்றவற்றை பாவிப்பதன் மூலமும் —

நைதரசன் பசளைக்கு பதிலாக ... ... ... போன்ற திரவப் பசளைகளை ஒரு வாரத்திற்கு சேமித்து வைத்து விசிறுவது போன்ற முறைகளை கையாள்வதன் மூலமும் யாழ். மாவட்ட விவசாயிகள் உரத்தடையின் மத்தியிலும் ஓரளவு திருப்திகரமான விளைச்சலைப் பெறக் கூடியதாக இருக்குமென அவர் மேலும் தெரிவித்தார். [இ-4]

## தேசிய கிறிஸ்தவ சங்கத் தலைவராக ஜெயநேசன்



யாழ்ப்பாணம், செப். 13

இலங்கை தேசிய கிறிஸ்தவ சங்கத்தின் தலைவராக தென்னிந்திய திருச்சபை ஆயர் அதி. வண. கலாநிதி எஸ். ஜெயநேசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய கிறிஸ்தவ சங்கம், அங்கிலிக்கன், மெதடிஸ்த, பப்டிஸ்ட், டச்சு சீர்திருத்தியசபை இரட்சணிய சேனை மற்றும் புரட்டஸ்தாந் சபைகளின் சங்கமாகும்.

இதுவரை கொழும்பு அங்கிலிக்கன் பேராயர் அதி. வண. கெனத் பெர்னாண்டோ இதன் தலைவராகப் பணியாற்றினார்.

26 - 08 - 95 கொழும்பில் தேசிய கிறிஸ்தவ சங்கக் காரியாலயத்தில் நடைபெற்ற வருடாந்தக் கூட்டத்தில் பேராயர் எஸ். ஜெயநேசன் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

1993 இல் தென்னிந்திய திருச்சபை யாழ்ப்பாண ஆயராக அவர் நியமனம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)


## அறிவித்தல்

விறகுகாலை, அரிவுகாலை உரிமையாளர்களுடனான கலந்துரையாடல்

**விடயம்:**

வன்னியிலிருந்து விறகு மரம் கொண்டு வருதல்

**காலம்:**

14 - 09 - 1995 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 - 00 மணி

**இடம்:**

பலாலி வீதி, திருநெல்வேலி, விவசாயக் கல்லூரி மண்டபம் மேற்படி கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி

விவசாய / சு. கா. பகுதி

த.பொ.சே. நிறுவனம்

தாவடி,

தமிழீழம்.

[இ-2239]



அஞ்சனந்தாழ்வு

## புனித ஆரோக்கியமாதா திருநாள்

(கஸ்தூரியார் வீதி)

இன்று புதன்கிழமை (13 — 09 — 1995) மாலை 4-15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஞாயிற்றுக்கிழமை (17 — 0 — 1995) காலை 7-00 மணியளவில் திருநாள் திருப்பலியுடனும், திருச்சுருப ஆசிருடன் முடிவடையும்.

அருளுரை:

அருட்திரு கொலின்ஸ் சாள்ஸ்

நாவாந்துறை திருச்சபை

J. X. பேணாட்றெஞ்ஞோ,

பங்குத்தந்தை.

[88508]



யாழ். வணிகர் கழக

## விசேட பொதுக் கூட்டம்

யாழ். வணிகர் கழக நிர்வாகத்தினருக்கும், வணிக உரிமையாளர்களுக்கும் இடையே ஓர் முக்கிய கலந்துரையாடல்.

இடம் : யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபம்

காலம் : 14 - 09 - 1995 வியாழக்கிழமை

நேரம் : பிற்பகல் 3-00 மணிக்கு

கூட்டம் சரியாக 3-15க்கு ஆரம்பமாகி 5-00 மணிக்கு நிறைவடையும். ஆகவே குறித்த நேரத்திற்கு சகலதுறை வணிக உரிமையாளர்களும் தவறாது சமுகம் கொடுக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். பல முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்படும்.

நன்றி.

யாழ். வணிகர் கழகம்.

[இ-2287]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சில உடைக்காத 120 அம்பியர்ஸ் Bosh ஜெனரேட்டர் [ஜேர்மன் தயாரிப்பு] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். புதியஇல. 185, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (38507)

### தேவை

வடபிரதேச இந்து சமய ஸ்தாபனம் ஒன்றின் 'சமூக சேவை செயற்பாட்டுக்கு நல்ல நிலையில் உள்ள அச்சுக்கூட உபகரணங்கள் அவசரம் தேவைப்படுகின்றன. விபரங்களுக்கு: விள. இல. 845, மே/பா உதயன். [38474]

### வணி. புள்ளிவிபரவியல்

அலகு 1 வெளிவந்துவிட்டது. தொகுப்பு திரு. எஸ். சோதிலிங்கம் [B. B. A.] மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்குமிடம் ஆனந்த் புத்தகசாலை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (38506)

### புலமைப் பரிசில்

வெற்றிக்கனி இதழ் — 4 வெளிவந்துவிட்டது. மாதிரி வினாவிடை ஆண்டு — 4 ஆக்கம்: பொன் சக்திவேல் இவை இரண்டும் Brightஇன் வெளியீடுகள்: புலமைப்பரிசில் ஆண்டு — 5 1995ஆம் ஆண்டு முதல் அமுலுக்குவரும் புதிய பாடத்திட்டத்தை தழுவியது. ஆக்கம்: தம்பிஐயா தேவதாஸ். விற்பனை பூபாலசிங்கம் புத்தக நிலையம். யாழ்ப்பாணம். [சி-2234]

---

## SCIENCE COLLEGE

பெருமாள் கோயில்
யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**
BY
**Mr. BRITTO**

புதிய பிரிவு
SAT., SUN. 1 p.m.
THUR. FRI. 4 p.m.

வழமையான
பிரிவு வகுப்பு
நடைபெறுகிறது.


[சி-2226]

---

முதலாவது

## பிறந்ததின வாழ்த்து

(13 – 09 – 1995)



### ★ செல்வி பிரியங்கா ★

சங்கத்தானையில் வசிக்கும்
மச்சேந்திரகுமார் விமலாதேவி
தம்பதிகளின் செல்லப் புதல்வி
பிரியங்கா
தனது முதலாவது பிறந்தநாளை
இன்று தனது இல்லத்தில் அப்பா அம்மாவுடன்
வெகு சிறப்பாக கொண்டாடுகிறார்.

பிரியங்காவை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார் தேவி, கௌரி, குறிஞ்சி பேபி மச்சாள், யாழ். நகரில் இருக்கும் பெரியப்பா, பெரியம்மா, துர்க்கா அக்கா, மன்னாரில் இருக்கும் சித்தப்பா, சின்னம்மா, அண்ணா மயூரன், செந்தூரன், தம்பி கோபி கொக்குவிலில் இருக்கும் அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, அக்காமார் செல்வி, மலர், வேணி, குமரன் அண்ணா, வதனி சித்தி, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தியடி விநாயகர் அருளுடன் பல கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றார்கள்.

அப்பா, அம்மா
க. மச்சேந்திரகுமார்
(யாழ். பல்கலைக்கழகம்)
ம. விமலாதேவி

"ஜெயவதனி வாசம்"
தட்டாதெரு, (சங்கத்தானை)
சாவகச்சேரி. [38483]

---

## LIONS CLUBS INTERNATIONAL

### DIST: 306B – REGION I – LEO CLUBS

I wish to notify that the Advisory Committee meeting of the Leo Clubs of Region I - Jaffna Dist, fixed for 13th Sep, 95 is postponed due to unavoidable circumstances.

**Lion S. S. Thangarajah,**
Functional Director /
Leo Co-ordinator: Region I
Jaffna Dist.

'Marutha Mahal',
Manipay. (38509)

---

இலவச மருந்தாளர் பயிற்சி நெறி

## அறிவித்தல்

மருந்தாளர் பயிற்சி நெறி எதிர்வரும் 30 - 09 - 1995 இல் ஆரம்பமாக இருக்கின்றது. ஆகவே, முன்னர் பத்திரிகையில் வந்த விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அனுப்பியவர்களும், புதிதாக விண்ணப்பிக்க விரும்புபவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு 15 - 09 - 1995 காலை 9-00 மணிக்கு
இல. 8, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு உரிய சான்றிதழுடன்
நேரில் வரவும்

முக்கிய குறிப்பு:
மருந்தாளர் இல்லாத மருந்தகம் தொடர்ந்து இயங்க முடியாது என்பது தமிழீழ சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தலாகும்.

க. மு. பத்மநாதன்.
செயலாளர்.

வடபிராந்திய
யாழ். ஆங்கில மருந்து
வணிகர் மன்றம்

(சி/2236)

---

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 16 — 12 — 1921 | 03 — 09 — 1985 |

### அமரர் முருகப்பர் கந்தையா

திதி: 13 – 09 – 1995

விழியோரம் நீர்சுரக்க விதியோரம் போகின்றோம்-
என்றும்
சதியாக நீவந்து காத்தருள்வாய் ஐயா!
சாந்தி!

அன்பு மனைவி, பிள்ளைகள்.
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

44/1, கொழும்புத்துறை வீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம். (38470)

---

## 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் கணபதி தியாகேசு

(காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன மின்பகுதி உத்தியோகத்தர்)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 07 — 01 — 1931 | 31 — 08 — 1988 |

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய முருகனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள், பெறாமக்கள், மருமக்கள்,
மைத்துனர், உற்றார், உறவினர்.

இமையாணன்,
ஆதியா மனை, உடுப்பிட்டி. (38502)

---

நாளை முதல் நெல்லியடியிலும்........
தன்பணியைத் தொடங்குகிறது

# தமிழீழ வைப்பகம்

BANK OF TAMILEELAM

உங்களிற்காகவே உருவான,
வைப்பகத்துடன் இணையுங்கள்
உங்கள் வாழ்வில்
உயர்வினை அடைவீர்கள்.

மேலதிக விபரங்கள் பெற எமது பணியகத்தை அணுகுங்கள்.

**தமிழீழ வைப்பகம்,**
முதன்மைச்சாலை,
நெல்லியடி.

தமிழீழ வைப்பகம் தம...

[சி-2231]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெதடிஸ்த திருச்சபையின்
## வடக்கு - கிழக்கு
## புதிய மறைமாவட்டத் தலைவர்

பக்கம் - 6



### அருட்திரு S. S. கருணைராஜ்

கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற மெதடிஸ்த திருச்சபையின் திருப்பேரவை மாநாட்டில் அருட்திரு S S கருணைராஜ் அவர்கள் வடக்கு - கிழக்கு புதிய மறைமாவட்டத்தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இவரை மெதடிஸ்த திருச்சபை யாழ் சேகர இறை மக்களாக வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மெதடிஸ்த திருச்சபை
யாழ் சேகரம்.

(38510)

---

இது ஓர் அரிய சந்தர்ப்பம்

மாணவர்களினதும் மற்றும் அனேகரின்தும் வேண்டுகோளின் பேரில்

## நீடிக்கப்பட்டுள்ளது

இன்றுடன் ஆறாவது நாளாக வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கின்றது

யாழ். மிட்ரவுண் றோற்ரறக்ற் கழகம் நடத்தும்

## கண்காட்சி

இடம் :- யாழ். மிட்ரவுண் றோற்ரறக்ற் கழக காரியாலயம்
(83, கோவில் வீதி, கைலாய பிள்ளையார் கோவில் அருகில்).

காலம் :- இன்றிலிருந்து தொடர்ந்து 15-9.95 வரை

★ பறவைகள், மிருகங்கள் கொண்ட விலங்கு காட்சி [சரடி, மான், குதிரை, தேவாங்கு, குரங்கு முதலை உட்பட இன்னும் பல]
★ சிற்பிகளின் கலை ஞானத்தைக் காட்டும் உருவச் சிலைகள்
★ உங்கள் திறமைகளை வெளிக்காட்டி உடன் பரிசில்கள் வெல்ல உன்னத விளையாட்டுக்கள்
★ சிறுவர்களுக்கு உற்சாகமூட்டும் விளையாட்டு பொறிகள்
★ கண்கவர் பூஞ்செடிகள்

வந்து பாருங்கள்!
கண்டு மகிழுங்கள்

பிரவேசம்: ரூபா 10/- மட்டுமே

[சி/2249]

---

# மரண அறிவித்தல்

## பெனடிக்ற் ஞானப்பிரகாசம்

(முன்னாள் ப. நோ. கூ சங்கம் — மட்டக்களப்பு)

மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான பெனடிக்ற் ஞானப்பிரகாசம் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து பெனடிக்ற், மதலேனாள் ஆகியோரின் அன்புமகனும், அல்பிறட் முத்தையா, மாகிறேட் ஆகியோரின் அன்பு மருமகனும், அக்னெஸ் ஞானப்பிரகாசம் அவர்களின் அன்புக்கணவரும், டிலீபன் [புனித பத்திரிசியார் கல்லூரி 10 D], கிருஷ்ணி (திருக்குடும்பக் கன்னியர் மட ஆங்கிலப்பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பெனடிக் அன்ரனி (நகரசபை திருமலை) அவர்களின் அன்புச்சகோதரனும், கிறிஸ்ரியன் மொனிக்கா, கொன்சி, றெஜினா, லூமினா, அமலதாஸ், சிசிலியா, பிரான்சிஸ்யோசவ், அலோசியஸ், கிறேஸ்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. யேசுதாஸ், மணிவா கிறிஸ்ரியன், பிரசாத், வோல்டர், சுரேஸ்குமார், ஆரோக்கியநாதன், மேரி றெஜினா அமலதாஸ், அருணம்மா பிரான்சிஸ், சாமினி அலோசியஸ் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (13-09-95) புதன் கிழமை பி. ப 3 00 மணியளவில் நல்லடக்கத்திற்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மோ. அமலதாஸ்
(மைத்துனர்)

309 பாசிசால் வீதி,
யாழ்ப்பாணம்.

[38522]

---

## பரத நாட்டிய அரங்கேற்றம் ஒத்திவைப்பு

இன்று மாலை நல்லூர் இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் நடைபெற இருந்த விடுதலைப்புலிகள் போராளிக் கலைஞரான செல்வி பிரசன்னாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் பிற்போடப்பட்டுள்ளது.

அரங்கேற்றம் நடைபெறும் திகதி குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் வெளியீட்டுப் பிரிவு அறிவித்துள்ளது. (இ)

---

# D. M. I

233, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

## A/L 96

பகல் நேர வகுப்பு
(DAY)
கலை வர்த்தகப் பிரிவு

ஆரம்பம்:
**15-09-1995**
வெள்ளி காலை 8மணி

[38521]

---

## O/L மீட்டல்

விஞ்ஞானம்
Mr. J. R. சூரி
கணிதம்
Mr. தயாளன்

**O/L DAY CLASS**

Yr. 9, 10 வகுப்புகளும் நடைபெறுகின்றன.

**SHAMROCK**
யாழ். சுண்டுக்குளி

[38516]

---

# மரண அறிவித்தல்

## வோல்டர் வைத்திலிங்கம்
செல்வி
## தேவசுதர்சினி பத்மநாதன்

ஏழாலை தெற்கு தென் இந்திய திருச்சபையைச் சேர்ந்த வோல்டர் வைத்திலிங்கம் (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்), செல்வி தேவசுதர்சினி பத்மநாதன் (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோர் நேற்று (12-09-1995) அகால மரணமானார்கள்.

வைத்திலிங்கம் காலஞ்சென்ற இரத்தினம்மாவின் கணவரும், அருந்தவசீலன், அருந்தவலோஜினி, அருந்தவராசா, அருந்தவஈஸ்வரன், தயாளன் (சென். ஜோன்ஸ் கல்லூரி ஊழியர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோசப்பின், ஜெயவதி, சத்தியா, மனோகரி, காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் மாமனாரும், பிரகாஸ்கரன், தேவசுதன், சுதர்சன், நேற்று அகால மரணமான தேவசுதர்சினி, சுரேஸ்கரன் (போராளி), இராஜினி, அயூலின் நிரோசனா, ரெபேக்கா, யஸ்ரின், ஜெயநிதி ஆகியோரின் பேரனுமாவார்.

செல்வி தேவசுதர்சினி காலஞ்சென்ற பத்மநாதன் - அருந்தவலோஜினியின் அன்பு மகளும், பிரகாஸ்கரன், தேவசுதன், சுரேஸ்கரன் (போராளி), இராஜினி, சுதர்சன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

இவர்களது நல்லடக்க ஆராதனை இன்று (13-9-95) காலை 10 மணியளவில் 42/5, பாண்டியந் தாழ்வு, சுண்டுக்குளியில் நடைபெற்று தென்னிந்திய திருச்சபை (City Mission) சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
மனோகரன்
(பெரிய தந்தை)

[38524]

---

# ஆசிரியர்கள் தேவை

ஆண்டு 5 முதல் ஆண்டு 11 வரை கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, ஆங்கிலம், தமிழ், வர்த்தகம் ஆகிய பாடங்கள் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள், கற்பித்தல் அனுபவம், பிறந்த திகதி என்பவற்றை உள்ளடக்கிய சுயவிவரக் கோவையை சொந்தக் கையெழுத்தில் தயாரித்து 18-09-95 க்கு முன்னர் தபாலில் அனுப்பிவைக்கவும்.

நிர்வாக இயக்குநர்
யூனிவேர்சல்
அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்

(சி/2247)

---

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை செல்லத்துரை

காரைநகர் பயிரிக்கூடலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை செல்லத்துரை (12-09-95) இல் காலமானார். இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், இராஜபூபதி (முன்னாள் கலாசார அதிகாரி), இராஜமலர் (கனடா), ஞானவல்லி யாழ். பல்கலைக்கழகம், ஆகியோரின் அன்புத் தந்தையும், மாசிலோன்மணியின் (கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13-09-95) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. ஞானவல்லி
(மகள்)

229, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

(38514)

---

## திருமதி
## தில்லைவனம்பிள்ளை கண்ணம்மா

திருமதி தில்லைவனம்பிள்ளை கண்ணம்மா 12-9-95 இல் காலமானார். அன்னார் காலஞ்சென்ற செ. ஆ. தில்லைவனம்பிள்ளையின் அன்பு மனைவியும் (ஸ்ரோபகர் லக்ஷ்மி விலாஸ்), சங்கரலிங்கம், சுப்லக்ஷ்மி, சிவநாதன் ஆகியோரின் அருமைத் தாயாரும், மாணிக்கம், நவரத்தினம், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், அன்னம்மா ஆகியோரின் சகோதரியும், சகுந்தலாதேவியின் மாமியாரும், காயத்திரி, சஞ்சீவ்குமார், கல்யாணி, செந்தூரன், பிரேந்திரா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று புதன் கிழமை [13-9-95] 15 A, மாட்டீன் றோட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தி. சங்கரலிங்கம்
(மகன்)

[38519]

---

## கனகரத்தினம் குலதாஸ்
## (முகுந்தன்)

திருநெல்வேலியைச் சேர்ந்த கனகரத்தினம் குலதாஸ் (முகுந்தன்) ஜேர்மனியில் [30-8-95] அன்று காலமானார்.

இவர் கனகரத்தினம் புவனேஸ்வரி (ஜேர்மனி) தம்பதிகளின் மூத்தபுதல்வனும், பிரேமதாஸ், லக்ஷ்சலா, மோகனதாஸ் (யா/மத்திய கல்லூரி ஆண்டு 11 மாணவன்) ஆகியோரின் மூத்தசகோதரனும், சபாரத்தினம், காலஞ்சென்ற பஞ்சவர்ணம் என்பவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிச்சடங்குகள் ஜேர்மனியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி வடக்கு,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்

(38515)

---

## செல்வி சாந்தி மகேந்திரன்

(ஆசிரியை யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்)

அச்செழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி ம. சாந்தி நேற்று அகாலமரணமானார்.

அன்னார் மகேந்திரன் (ஓய்வுபெற்ற லிகிதர்), புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகளும், சத்தியகுமார் (லண்டன்) வசந்தி (ஆசிரியை) சசிக்குமார் (யாழ். இந்துக் கல்லூரி கணிதபிரிவு 95) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

இவரது தகனக்கிரியைகள் நேற்று (12-09-95) நீர்வேலியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச. மகேந்திரன்
(தந்தை)

அச்செழு,
நீர்வேலி.

(38525)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 192/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 13-09-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org